4. அறிவிப்பு.

பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வு குழுவின் தீர்மானத்தின்படி பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நாளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் செல்வி ஜெ. ஜெயலலிதா ஆகியோரின் உரைகளும மாண்புமிகு தமிழக முதல்வரின் பதிலுரையும் இடம் பெறும்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் அறிக்கையிலே முன்மொழிந்ததை நானும் வழிமொழிகின்ற பணியிலே சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி மக்களுக்கும், என்னுடைய தோழமைக் கட்சியாக இருந்து தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த விதமான இன பாகுபாடும் இல்லாமல் என்னையும் ஆதரித்து என்னைப் போன்றே எங்கள் கட்சியில் வன்னிய சமூகத்தைச் சேர்ந்த பூவராகன், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த செங்கம் சேட்டு, மதிப்பிற்குரிய என்னைப் போன்றே இங்கே வந்துள்ள விஜயேந்திரையா இவர்களை எல்லாம் எந்தவிதமான இன பாகுபாடும் இல்லாமல் ஆதரித்து எங்களைக் கொண்டு வந்தார்களே அவர்களுக்கு முதலில் நான் வணக்கத்தைத் தெரிவித்து, எங்களுக்கு இந்த தொகுதிகளை வாங்கிக் கொடுத்த எங்கள் கட்சிக்காரர்களான ஜனதா தளம் வி. பி. சிங், உபேந்திரா போன்றவர்களுக்கும் முதலில் வணக்கத்தைத் தெரிவித்து துவக்குகிறேன்.